# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 01.07.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். NC 1953/F/2022 in SA 13891/F/2021**

திரு.K.P.கிருஷ்ணமூர்த்தி, மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொது தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
ஜெயங்கொண்டம்-621 802,
அரியலூர் மாவட்டம். --- பொது அதிகார அமைப்பு

**ஆணை**

ஆணையத்தால் 28.06.2022 அன்று SA 13891/F/2021 வழக்கில் கீழ்கண்ட ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

> **“மேல்முறையீட்டாளர் சட்டப்பிரிவு 6(1)-ல் கோரிய அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை உரிய சான்றொப்பமிட்டு மேல்முறையீட்டாளருக்கு நேரில் சார்வு செய்து இவ்வாணைக் கிடைக்கப்பெற்ற ஒரு வாரத்திற்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 7(6)ன் படி கட்டணமின்றி வழங்கி, வழங்கப்பட்ட தகவல் மற்றும் மேல்முறையீட்டாளர் ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் மேல்முறையீட்டாளர் முழுமையான தகவல்களை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் கடிதத்தினையும் இவ்வாணையத்திற்கு**

**தற்போதைய பொது தகவல் அலுவலர் பதிவஞ்சல் மூலம் சமர்ப்பிக்குமாறு இவ்வாணையம் உத்தரவிடுகிறது".**

2. மேற்சொன்ன ஆணை நிறைவேற்றப்படவில்லையென்று தெரிவித்து, மனுதாரர் 30.07.2022 தேதியிட்டு ஆணையத்திற்கு அனுப்பிய ஆணை நிறைவேற்றாமை மனு ஆணையத்தால் பெறப்பட்டு NC 1953/2022 ஆக பதிவு செய்யப்பட்டு, மேற்சொன்ன ஆணை நிறைவேற்றாமை மனுவின் மீது நேரடி விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு, 01.07.2025 அன்று ஆணையத்தின் நேரடி விசாரணைக்கு நேரில் ஆஜராகும்படி மனுதாரர் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் ஆகியோர்களுக்கு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

3. இன்றைய (01.07.2025) விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி திரு.சி.பழனிச்சாமி, மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (மண்டலம்-2), ஜெயங்கொண்டம், அரியலூர் மாவட்டம் அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

4. இன்றைய விசாரணையின்போது ஆணையத்தின் மேற்சொன்ன 28.06.2022 தேதியிட்ட ஆணை நிறைவேற்றப்படாதது குறித்து, பொதுத் தகவல் அலுவலரிடம் விசாரணை செய்த போது. பொதுத் தகவல் அலுவலர் மனுதாரருக்கு ந.க.எண்.1772/2021/ஈ5, நாள் 04.07.2022 மற்றும் ந.க.எண்.ஆ5/1800/2022, நாள் 05.07.2022 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு இனம் வாரியாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக ஆணையத்தின் முன் தெரிவித்தார்.

5. இன்றைய விசாரணையில் மனுதாரர் பொது அதிகார அமைப்பால் தகவல்கள் தவறான/ முழுமையற்ற தகவல்களாக வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்கள் குறித்து தனது ஆட்சேபணை குறித்த கடிதத்தினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். அதன் நகல் இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலரிடம் ஆணையத்தின் முன் வழங்கப்பட்டது.

6. மேலும், இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பால் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்கள், மற்றும் மனுதாரரின் வாதுரைகள் ஆகியவற்றை ஒன்றன்பின் ஒன்றாக பரிசீலனை செய்கையில், மனுதாரரின் இனம் 3 மற்றும் 12-ல் அதிகப்படியான தகவல்களும், இனம் 15-ல் மூன்றாம் நபர் குறித்த தகவல்கள் என்பதால் தகவல்கள் வழங்கவழிவகையில்லை இல்லை என்பதை ஆணையம் பதிவு செய்து கீழ்க்கண்ட உத்தரவினை பிறப்பிக்கின்றது.

- **இன்றைய விசாரணையில் மனுதாரர் அளித்த ஆட்சேபணையின் பேரில் உரிய தகவல்களை மனுதாரருக்கு இவ்வாணை**

**கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் அனுப்பிவிட்டு, அதனை மனுதாரரும் தேதியிட்டு கையொப்பமிட்டு பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகலையும் அது குறித்து அறிக்கையினையும் ஆணையத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். அதில் இனம் 3 (ம) 12-க்கு 31.03.2021 ஆண்டுக்கான இறுதி தணிக்கை அறிக்கை நகல் வழங்கினால் போதுமானது. மேலும், இன்றைய விசாரணையில் மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்கள் கையொப்பமிடப்படாமல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்ததன் பேரில், அலுவலக முத்திரையுடன் உரிய கையொப்பமிட்டு பொது தகவல் அலுவலர் மனுதாரருக்கு தகவல்களை உரிய சான்றொப்பமிட்டு வழங்கிவிட்டு அது குறித்த அறிக்கையினை 24.07.2025 அன்று பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். NC 1953/F/2022 in SA 13891/F/2021</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொது தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
ஜெயங்கொண்டம்-621 802,
அரியலூர் மாவட்டம்.

**<u>மனுதாரர்:-</u>**

திரு.K.P.கிருஷ்ணமூர்த்தி,
பள்ளிக்கூடத்தெரு,
கழுவந்த்தோண்டி அஞ்சல்,
ஜெயங்கொண்டம் வழி,
உடையார்பாளையம் வட்டம்,
அரியலூர் மாவட்டம்-621 802.

Copy to: File NS/PA-